DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF PROCEDURE)

IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, THIRUPATTUR DISTRICT

| Name | கேதரின் | Village | கொடையாஞ்சி |
|---|---|---|---|
| Husband's Name | அலெக்சாண்டர் | Taluk | வாணியம்பாடி |
| Age | 52 | Calling | இல்லத்தரசி |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1872 on the day of **10.02.2026**

**O.S. No. 100/2022** **வா.சா.1** **12.32 PM – 01.20 PM**

**குறுக்கு விசாரணை ( 4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் ) –**

1. வழக்கு சொத்தானது குடும்ப சொத்தில் இருந்த வருமானத்தை வைத்து வாங்கியதாக என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் தெரிவித்து இருக்கிறேன் அவ்வாறு குடும்ப சொத்து இருந்ததை காட்டுவதற்கு எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான் அது மாமனார் மற்றும் மாமியாரின் சொத்துக்கள் என சாட்சி மேலும் கூறுகிறார்.

2. வழக்கு சொத்தை தவிர வேறு எதுவும் குடும்ப சொத்துக்களோ அல்லது குடும்ப சொத்தில் இருந்து வந்த வருமானங்கள் எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல, 7ம் பிரதிவாதி கடைசி பிள்ளை என்பதால் அவர் பெயரில் எழுதி வைத்துள்ளோம். வழக்கு தாக்கல் செய்வதற்கான விவரம் வக்கீலிடம் யார் சொன்னது என்றால் என்னுடைய கணவர் மற்றும் நாங்கள்தான் கூறினோம்.

3. இந்த வழக்கை தாக்கல் செய்த போது 7ம் பிரதிவாதியின் வயது 42 என குறிப்பிட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. அப்படி என்றால் வழக்கு சொத்தை வாங்கும் சமயம் 7-ம் பிரதிவாதிக்கு 25 வயது என்று சொன்னால் சரியல்ல 17 வயது இருக்கும். நாங்கள் எங்கு வசித்து வருகிறோம் என்றால் கொடையாஞ்சி நகரில் தாமஸ் நகரில் வசித்து வருகிறோம். 2ம் பிரதிவாதி மற்றும் 5ம் பிரதிவாதிகளுடைய வீடுகளும் தாமஸ் நகரில் தான் உள்ளது என்றால் சரிதான்.

4. கொடையாஞ்சியில் உள்ள மாதா கோவில் தெருவிலும் ஒரு வீடு உள்ளது என்றால் சரிதான் அது 3, 4 மற்றும் 7 பிரதிவாதிகளுக்கு பாகம். மேற்படி நபர்களுக்கு பிரித்துக் கொடுக்கப்பட்டு தான் தனித்தனியாக குடியிருந்து வருகிறார்கள் என்றால் பிரிக்கப்படவில்லை, கைகாட்டி அவரவர்கள் அங்கு குடியிருக்கிறார்கள். மேற்படி நபர்கள் அனைவரும் தனிகுடுத்தனமாக வாழ்ந்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

5. கொடையாஞ்சியில் உள்ள மாதா கோவில் தெருவில் உள்ள வீடு மற்றும் தாமஸ் நகரில் வீடுகள் எவற்றையும் இந்த வழக்கில் சேர்த்து தாக்கல் செய்யவில்லை என்று

சொன்னால் சரிதான், நிலத்திற்கு மட்டும் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் வீடுகளுக்கு அல்ல. 7–ம் பிரதிவாதி 12ம் வகுப்பு முடித்தவுடன் மார்டன் ஸ்டீல் கம்பெனிக்கு வேலைக்குசென்று விட்டார் என்றால் 12ம் வகுப்பு முடித்தபிறகு சில வருடங்களுக்கு வீட்டில் தான் இருந்தார் தற்போதைக்கு அங்கு தான் வேலை செய்கிறார்.

6. 7ம் பிரதிவாதி வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்துவந்தார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. 7ம் பிரதிவாதி 17 வயதிலேயே வேலைவக்கு சென்றுவிட்டார் என்றாலோ அவருடைய சொந்த வருமானத்தை வைத்து தான் இந்த சொத்தை வாங்கினார் என்று சொன்னால் சரியல்ல. சொத்து வாங்கிய காலத்தில் நாங்கள் அனைவரும் தனிதனிக்குடும்பமாக இருந்தோம் என்றாலும், ஏழாம் பிரதிவாதி தன்னுடைய தாயார் இருதய மேரியும், 7ம் பிரதிவாதியும் தனியாக வாழ்ந்து வந்ததால் பாசத்தின் பெயரில் அவருடைய தாயார் பெயரும் சேர்த்து தான் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

7. 2005 ம் வருடத்திய கிரய ஆவணத்தில் ஏழாம் பிரதிவாதி மற்றும் அவருடைய தாயார் பெயரை தவிர எங்கள் குடும்பத்தினுடைய பெயர்கள் எதுவும் இல்லை என்று சொன்னால் சரிதான் ஆனால் என்னுடைய கணவரின் பெயர் உள்ளது கையொப்பம் செய்யவில்லை. நான் கூறுவது தவறு என்றாலும் அது யாருடைய பெயரிலும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய மாமியார் 2017 ஆம் வருடம் இறந்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி நபர் இறந்த பிறகு வா.சா.ஆ.4 ஆவணமான பட்டா இருதய மேரி மற்றும் ஜெயராஜ் ஆகியோர் பெயரில் தான் உள்ளது என்று சொன்னால் சரிதான், சாட்சி மேலும் திருமணம் ஆகாததால் அவ்வாறு எழுதி வைக்கப்பட்டுள்ளது என கூறுகிறார். நான் கூறுவது தவறு என்றாலும் மேற்படி இருதய மேரி இறக்கும் முன்பே ஏழாம் பிரதிவாதிக்கு திருமணம் ஆகிவிட்டது என்று சொன்னால் சரிதான்.

8. வழக்கு சொத்தானது ஏழாம் பிரதிவாதி ஜெயராஜுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதால் இருதய மேரி இறந்த பின்பு அனைத்து வருவாய் துறை ஆவணங்களும் ஏழாம் பிரதிவாதி ஜெயராஜ் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டு விட்டது என்று சொன்னால் சரியல்ல. இருதய மேரி இறந்த பிறகு பட்டா மாற்றம் செய்ய நான் எதுவும் மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கூறுவது போன்று வழக்கு சொத்தானது கூட்டுக் குடும்பச் சொத்து என்பது தவறு என்றால் சரியல்ல.

9. நாங்கள் அனைவரும் கூட்டுக் குடும்பமாக இருந்ததற்கு எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சாட்சி அதற்கு என் கணவர் இறப்பதற்கு முன்பு சொத்தை பயன்படுத்திக் கொண்டுதான் இருந்தோம் பின்பு தான் பிரச்சனை ஏற்பட்டது என கூறுகிறார். வழக்கு சொத்தில் நாங்கள் எந்த காலத்திலும் கூட்டு சுவாதீனத்தில் இருந்ததில்லை என்றால் சரியல்ல. கூட்டுக் குடும்ப சொத்துக்கள் அனைத்தையும் இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றாலும் ஏழாம்

பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்தை அபகரிக்கும் நோக்கத்துடன் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. ஏற்கனவே கூட்டு குடும்பமாக இருந்த வீட்டு சொத்துக்கள் மட்டும்தான் இருந்தது அது என் கணவர் இறப்பதற்கு முன்பே பிரித்துக் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல, எதுவும் பிரிக்கப்படவில்லை அங்கங்கே நாங்கள் வசித்து வந்திருந்தோம். எனவே இந்த வழக்கானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை ( 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் ) –**

1. நான் பரிகாரம் கோரி வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னுடைய மாமனார் மற்றும் மாமியாருக்கு சொந்தமான சொத்தில் பாகம் கேட்டு போட்டுள்ளேன். வழக்கு சொத்தானது யார் சம்பாத்தியம் மூலம் வாங்கப்பட்ட சொத்து என்றால் என்னுடைய மாமனார் மற்றும் மாமியாரின் சம்பாத்தியம் ஆகும். எனது மாமனார் மற்றும் மாமியாரின் பெயர் என்னவென்றால் ஜோசப் மற்றும் இருதய மேரி ஆகும். என்னுடைய மாமனார் என்ன வேலை செய்து வந்திருந்தார் என்றால் விவசாயம் மற்றும் கூலி வேலை. என்னுடைய மாமியார் இல்லத்தரசி.

2. என்னுடைய கணவரின் பெயர் என்னவென்றால் அலெக்சாண்டர் ஆகும். என்னுடைய கணவருடன் பிறந்தவர்கள் எத்தனை நபர்கள் என்றால் ஆறு ஆண் பிள்ளைகள் மற்றும் இரண்டு பெண் பிள்ளைகளாகும். எனக்கும் என் கணவருக்கும் எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் குறிப்பிட்ட தேதி ஞாபகம் இல்லை ராஜீவ் காந்தி இறந்த மாதம் தான் எனக்கு திருமணம் நடைபெற்றது. என்னுடைய மாமனாருக்கு மூத்த பிள்ளை யார் என்றால் என் கணவர் தான். என்னுடைய மாமனார் மாமியாருக்கு எவ்வளவு சொத்துக்கள் இருந்தன என்றால் 2 ¾ அல்லது 3 ¾ ஏக்கர் இருக்கும்.

3. எவ்வளவு சொத்துக்கு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை, என்னுடைய பாகம் எனக்கு கொடுத்தால் போதும். என்னுடைய மாமனார் எப்போது இறந்தார் என்றால் நினைவில்லை, மாமியார் இறப்பதற்கு முன்பே இறந்துவிட்டார். என்னுடைய மாமனார் இறந்த பிறகு என்னுடைய மாமியாரிடம் சொத்துக்களை பிரித்து கொடுக்க கேட்டோமா என்றால் மூன்று முறை பஞ்சாயத்து வைத்து கேட்டோம். என்னுடைய கணவர் எப்போது இறந்தார் என்றால் 2022ம் வருடம் இறந்தார்.

4. என்னுடைய கணவர் உயிருடன் இருந்தபோது அவருடைய சகோதரர்கள் பாகம் பிரிக்க கேட்டார்களா என்றால் கேட்டார்கள். ஏழாம் பிரதிவாதி ஜெயராஜ் க்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் என்னுடைய மாமியார் இறப்பதற்கு ஆறு மாதம் முன்பு நடைபெற்றிருக்கும். எனக்கு திருமணம் நடைபெறும் போது ஜெயராஜக்கு எவ்வளவு வயது இருக்கும் என்றால் அவர் நான்காம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தார்.

5. என்னுடைய கணவரின் சகோதரர்கள் என்ன வேலை செய்து கொண்டிருந்தார்கள் என்றால் தெரியுமா என்றால் தெரியும். 2ம் பிரதிவாதி பிராங்க்லின் என்ன வேலை செய்து வந்தார் என்றால் வாகனம் பழுதுபார்க்கும்வேலை செய்துவந்தார். 3–ம் பிரதிவாதி ஆதாம் என்ன வேலை செய்து வந்தார் என்றால் வர்க்ஷாப் வாகனம் பழுதுபார்க்கும்வேலை செய்து வந்தார். 4–ம் பிரதிவாதி லாரன்ஸ் என்ன வேலை செய்து வந்தார் என்றால் அதே கம்பெனி வர்க்ஷாப் வாகனம் பழுதுபார்க்கும்வேலை செய்து வந்தார். 5–ம் பிரதிவாதி ஆதாம் என்ன வேலை செய்து வந்தார் என்றால் தேங்காய் பறிப்பது மற்றும் ஆடு மேய்க்கும் வேலை செய்து வந்தார். என்னுடைய கணவர் என்ன படித்துள்ளார் என்றால் பன்னிரண்டாம் வகுப்பு வரை படித்துள்ளார். ஆதாம் என்ன படித்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது. 7ம் பிரதிவாதி ஜெயராஜ் என்ன படித்துள்ளார் என்றால் பன்னிரண்டாம் வகுப்பு வரை படித்துள்ளார்.

6. 1 மற்றும் 6 பிரதிவாதிகளான க்லோரி, வேலாங்கண்ணி ஆகியோருக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் ஒன்றாம் பிரதிவாதிக்கு எனக்கு திருமணம் நடைபெறும் முன்பே திருமணம் ஆகிவிட்டது, ஆறாம் பிரதிவாதிக்கு என்னுடைய திருமணத்திற்கு பின்பு தான் திருமணம் நடைபெற்றது. வழக்கு சொத்தானது கூட்டுக் குடும்ப சொத்தா என்றால் ஆமாம், எவ்வளவு கொடுத்து வாங்கப்பட்டது என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை வக்கீலிடம் கொடுத்துள்ளேன், 3 அல்லது 4 லட்சம் கொடுத்து வாங்கப்பட்டு இருக்கும்.

7. கூட்டு குடும்பத்தின் மொத்த ஆண்டு வருமானம் எவ்வளவு இருக்கும் என்றால் மாதம் 20 ஆயிரம் வருமானம் இருக்கும். வழக்கு சொத்து யார் யார் பெயரில் வாங்கப்பட்டது என்றால் என்னுடைய கணவர், 2, 5 மற்றும் 7 பிரதிவாதிகளின் பெயர்களில் தான் வாங்கப்பட்டது. நான் கூறுவது தவறு என்றாலும் வழக்கு சொத்தானது கூட்டுகுடும்ப வருமானத்திலிருந்து இருதய மேரி மற்றும் என்னுடைய மைத்துனர் ஏழாம் பிரதிவாதி ஜெயராஜ் பெயரில் தான் வழங்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். தற்போது வரை எங்கள் குடும்பத்தில் பாகப்பிரிவினை எதுவும் நடைபெறவில்லை என்றால் சரிதான்.

***குறுக்கு விசாரணை முடிவுற்றது. மறு விசாரணை இல்லை***

ESHWAR VISWANATHAN

DISTRICT MUNSIF
Digitally signed by ESHWAR VISWANATHAN
Location: VANIYAMBADI

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாணியம்பாடி.